தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 23, திருவள்ளுவர் ஆண்டு—2053

2022 மே 6, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்."

பொறுமையின் உறைவிடமாக இருப்பவரைத்தான் நிறைவான மனிதர் என்று உலகம் புகழும்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 231, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

231—

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைத்தல்

***2793—திரு. எஸ். சுதர்சனம்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் தொகுதி, புழல் ஒன்றியத்தில் உள்ள கிராம ஊராட்சிகளை பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 மே 6

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேவை மற்றும் அவசியத்தின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைகளை விரிவாக்க அரசு பரிசீலிக்கும் நேர்வில், உரிய ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரம் தொகுதிக்குட்பட்ட புழல் ஒன்றியத்தில் லைன், தீர்த்தகிரியம்பட்டு, அழிஞ்சிவாக்கம், சென்றம்பாக்கம், விளாங்காடுபாக்கம், கிராண்ட்லைன், வடகரை ஆகிய 7 ஊராட்சிகள் இருக்கின்றன. இவற்றில் சுமார் 50,000 பேர் வசிக்கிறார்கள். சென்னை மாநகராட்சியை ஒட்டிய பகுதி; இங்கிருந்து சுமார் 13 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. ஆனால், நிதி ஆதாரம் இல்லாததால் ஒன்றியத்தில் உள்ள 413 கிராம ஊராட்சி சாலைகளும், 65 ஊராட்சி ஒன்றிய சாலைகளும் கடந்த 10 ஆண்டுக் காலமாக போடப்படாமல் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அருகில் உள்ள மாநகராட்சிப் பகுதிகளில் அனைத்து அடிப்படை வசதிகளும் இருக்கின்ற நேரத்திலே, ஒட்டி இருக்கின்ற இந்தக் கிராம ஊராட்சிகளில் அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தினால் மக்கள் ஏக்கத்தோடு பார்க்கிறார்கள். மனதிற்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, இந்த 7 ஊராட்சிகளையும் நம்முடைய மாநகராட்சியில் இணைத்து, சாலை வசதிகள் ஏற்படுத்தித் தர வழிவகை செய்வாரா என்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சபையில் சொல்லியிருக்கிறேன். இப்போது ஊரக உள்ளாட்சித் தேர்தல் இரண்டு கட்டமாக நடைபெற்றிருக்கிறது. நகர்மன்றத்தினுடைய தேர்தலும் நடைபெற்றிருக்கிறது. ஏற்கெனவே தேர்தல் நடைபெற்று, 13 ஊராட்சிகளில் ஊராட்சி மன்றத் தலைவர்கள்

2022 மே 6]

பொறுப்பிலே இருக்கிறார்கள். அவர்களுடைய பதவிக் காலம் முடிகின்றபோதுதான் அந்தப் பகுதியை மாநகராட்சியுடன் இணைக்க முடியும். அதுவரை இதுதான் நிலை. இருப்பினும் உடனடி தேவை மற்றும் அவசியத்தின் அடிப்படையிலே இணைக்க வேண்டுமென்றால், உரிய முறைப்படி கலந்தாலோசித்து, அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் விருப்பப்பட்டால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது மாதவரம் பகுதியிலே பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் மூன்று பிரிவுகளாக நடைபெற்று, தற்போது அந்தத் திட்டம் அமலுக்கு வந்திருக்கிறது. இருந்தாலும், மாதவரம் பகுதி அதிகமான வளர்ச்சிகொண்ட பகுதி என்ற காரணத்தினால், இன்னும் 1,246 தெருக்களுக்கு பாதாளச் சாக்கடை வசதி இல்லாமல் மக்கள், அவதிப்படுகிறார்கள். அதனால் நிலத்தடி நீர் மாசுபட்டு, குடிப்பதற்குக்கூட பயனற்றதாக இருக்கிறது. ஆகவே, அதையும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சென்னையில் boat club பகுதியில் ஒரு சதுர அடிக்கு 1.50 ரூபாய்தான் property tax கட்டுகிறார்கள். அண்ணா நகரில் 1.50 ரூபாய்தான் கட்டுகிறார்கள். அடையாறில் 1.50 ரூபாய்தான் கட்டுகிறார்கள். ஆனால், மாதவரம் மண்டலம் 3–ல் வசிக்கின்ற மக்கள், ஒரு சதுர அடிக்கு 3.00 ரூபாய் வீட்டு வரி கட்டுகிறார்கள். அதேபோல வணிக வளாகத்திற்கு ஒரு சதுர அடிக்கு 10.00 ரூபாய் வரை கட்டுகிறார்கள். செல்வந்தர்கள் வசிக்கின்ற பகுதிகளில் உள்ள வணிக வளாகத்திற்கு 6.00 ரூபாய்தான் கட்டுகிறார்கள். ஆகவே, இந்த விகிதத்தை மாற்றி, ஏழைகள் வசிக்கின்ற மாதவரத்திற்கு சிறிதளவு வரி குறைப்பு செய்து தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணலி, சின்னசேக்காடு முதலிய பகுதிகளுக்கு 241.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 40 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 30–6–2022–க்குள் பணிகள் முடிவடையவுள்ளன. இத்திட்டத்தினால் இப்பகுதியில் வசிக்கும் 81,120 மக்கள் பயன்பெறுவார்கள். அதேபோல, மொத்தம் 2,400 சாலைகள் இருக்கின்றன. அவற்றில் 1,200 சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. மீதமிருக்கிற 1,200 சாலைகள் போடப்பட வேண்டும் என்று கேட்டார்கள். அந்தப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதற்காகத்தான் அந்த 1,200 சாலைகளும் போடப்படாமல் இருக்கின்றன. அதற்கென்று தனியாக நிதி கேட்கப்பட்டு, அந்த நிதியும் அதற்காக வழங்கப்படவுள்ளது. எனவே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை 30–6–2022–க்குள் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல் வரி விகிதத்தைப் பற்றிச் சொன்னார்கள். சென்னை மாநகராட்சியின் முந்தைய பதிவு உயர்வு காரணி 400 சதுர அடிக்குக்கீழ் ரூ.150; இணைக்கப்பட்ட உள்ளாட்சிப் பகுதி உயர்வு காரணி ரூ.125. 601–லிருந்து 1,200 சதுர அடி வரை ரூ.175; இணைக்கப்பட்ட உள்ளாட்சிப் பகுதிகளுக்கு ரூ.150. 1,200–லிருந்து 1,800 சதுர அடி வரை ரூ.200; இணைக்கப்பட்ட உள்ளாட்சிப் பகுதிகளுக்கு ரூ.175. 1,800 சதுர அடிக்குமேல் ரூ.250; இணைக்கப்பட்ட உள்ளாட்சிப் பகுதிகளுக்கு ரூ.200 என்று இருக்கிறது. ஏற்கெனவே 2008–ல் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால், அதைப் பற்றி மீண்டும் நம்முடைய மாநகராட்சி ஆணையர் மூலமாக பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தி, உரிய முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அது சீர் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. ஜெயசங்கரன் அவர்கள்.*

2022 மே 6]

திரு. A.P. ஜெயசங்கரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர் நகராட்சி, நரசிங்கபுரம் நகராட்சி ஆகிய இரண்டு நகராட்சிகளையும் ஒன்றிணைத்து மாநகராட்சியாக உருவாக்க முடியுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் நகராட்சி 3 இலட்சம் மக்கள்தொகை கொண்டதாக இருக்கிறது. நரசிங்கபுரம் நகராட்சியில், ஒரு இலட்சம் அளவில்தான் மக்கள்தொகை இருக்கிறது. 5 இலட்சம், 6 இலட்சம், 7 இலட்சம் என மக்கள்தொகை இருக்குமானால், இரண்டையும் இணைக்க முடியும். தற்போது இரண்டு நகராட்சிகளாகத் தனித் தனியாக இருந்து செயல்படுகின்றன. தேர்தல் நடைபெற்று இரண்டிலும் தலைவர்கள் வந்திருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய பதவிக் காலம் முடிகிறபோதுதான் அதைப்பற்றி யோசிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.

திரு. க. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் அயப்பாக்கம், வானகரம் மற்றும் அடையாளம்பட்டு ஆகிய மூன்று ஊராட்சிகள் உள்ளன. இவை சென்னை மாநகராட்சியை ஒட்டியிருக்கிற பகுதிகள். 15 வார்டுகள் சென்னை மாநகராட்சியில் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்த 3 ஊராட்சிகளும் இன்றைக்குத் தனியாக இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு அயப்பாக்கம் ஊராட்சியில் ஒன்றேகால் இலட்சம் மக்கள்தொகை உள்ளது; 40,000 வாக்காளர்கள் அங்கே இருக்கிறார்கள். அதேபோன்று வானகரம் ஊராட்சியில் 75,000 மக்கள்தொகை இருக்கின்றது. இவையெல்லாம் இன்றைக்கு ஊராட்சி என்ற அமைப்பில் இருந்து கொண்டிருக்கின்றன. 15 வார்டுகள் மாநகராட்சிப் பகுதியோடு எப்படி இணைக்கப்பட்டதோ, அதேமாதிரி இந்த 3 ஊராட்சிகளும் இணைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2022 மே 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் நகர்ப்புறங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்றவர்கள்தான். அவற்றைச் சுற்றியிருக்கிற ஊராட்சிகளை இவற்றுடன் இணைத்து, எப்படி நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டம், சாலை வசதி, தெருவிளக்கு வசதி, கழிவறை வசதி, மழைநீர் வடிகால் கட்டுகிறோமோ அதைப்போல அந்தக் கிராமங்களுக்கும் கட்டப்பட வேண்டும் என்ற எண்ணம் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இருக்கிறது. இதில், இரண்டு சிரமங்கள் இருக்கின்றன. ஒன்று, அங்கு ஏற்கெனவே தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்; இரண்டாவது, நகராட்சியுடன் அந்தப் பகுதியில் இணைந்த பிறகு, 100 நாள் வேலைத் திட்டம் அந்த மக்களுக்குக் கிடைக்காது. எனவே, மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் விருப்பப்பட்டால், அவர்களுடைய விருப்பத்தையும் பெற்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அந்த உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களுடைய பதவிக் காலம் முடிந்த பிறகு, அப்பகுதிகளைச் சேர்ப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள்.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். விரிவாக்கப்பட்ட மதுரை மாநகராட்சியின் முக்கியப் பகுதிகளாக, மதுரை விமான நிலையம் இருக்கக்கூடிய பெருங்குடி ஊராட்சியும், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் வர இருக்கிற எய்ம்ஸ் மருத்துவமனை, தோப்பூர் ஊராட்சியில் புகழுக்குரிய மதுரை காமராசர் பல்கலைக்கழகம், வடபழஞ்சி, நாகமலை புதுக்கோட்டை ஊராட்சியும் இருக்கின்றன. விரிவாக்கப்பட்ட மாநகராட்சியோடு விமான நிலையம் இருக்கக்கூடிய பகுதியையும், வரவிருக்கிற எய்ம்ஸ் மருத்துவமனை இருக்கக்கூடிய பகுதியையும், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் இருக்கக்கூடிய பகுதியையும் இணைத்து பல்வேறு*

2022 மே 6]

வசதிகளைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏதேனும் கருத்துரு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—10

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே அங்கே மேயராக இருந்தவர். உங்களுக்கெல்லாம் தெரியும்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 560 கோடி ரூபாயில் மதுரை மாநகராட்சிக்கு மட்டும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். எனவே, அந்தத் திட்டம் எந்தெந்த இடங்களுக்குச் செல்கிறது என்பதைக் கவனித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதையும் கவனத்தில் கொண்டு, மதுரை மாநகரத்தில் இருக்கிற மக்கள் என்னென்ன வசதிகளைப் பெறுகிறார்களோ, அதைப்போல, மதுரையைச் சுற்றியிருக்கிற பகுதிகளில் உள்ள மக்களும் அந்த வசதிகளைப் பெறுகிற வகையில் அவற்றைக் கவனித்து, அரசின் நிதிநிலைமைக்கேற்ப, அனைத்தும் செய்து தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 232, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

232—

பொறியியல் கல்லூரி

***9773—திரு. சி. மகேந்திரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*